30.03.2023 **ஆம் தேதிய சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருட்கள்**

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள அம்மா உணவகம் மேற்கூரை Galvalumi sheet ஆல் அமைக்கப்பட்டு, Fall ceiling செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்கூரை Sheet ஆங்காங்கே துரு பிடித்து Fall ceiling Gap -ல் எலி புகுந்து Fall ceiling முழுவதும் சேதமடைந்து கீழே விழும் நிலையில் உள்ளது. மேலும் எலி கடித்ததால், ஆங்காங்கே ஓட்டையும் விழுந்துள்ளது. இதனால் மழை காலங்களில் மழை நீர் உள்ளே கசிந்து பொது மக்கள் சாப்பிடும் போது மிகவும் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே Fall ceiling முழுவதையும் அகற்றி விட்டு, பழுதடைந்த Sheet -ஐ மாற்றி புதிய Sheet அமைப்பதற்கும், ஒயரிங் மற்றும் வர்ணம் பூசுதல் பணிகள் மேற்கொள்வதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5,00,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்**.445 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.2

இந்நகராட்சி பகுதிகளுக்கு மின்தடை / இயற்கை இடர்பாடு காலங்களிலும் தடையின்றி சீராக குடிநீர் வினியோகம் செய்வதற்கு வசதியாக நிறுவப்பட்டுள்ள 200KVA, 62.20KVA, 50 KVA மற்றும் 30KVA ஜெனரேட்டர்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து நல்ல முறையில் பராமரிப்பதற்கு ஏதுவாக, மேற்படி ஜெனரேட்டர்களின் வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,50,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்**.446 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

28.04.2023 **ஆம் தேதிய சாதாரணக் கூட்டப் பொருட்கள்**

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கில் சேகரிப்பு மையத்தின் கழிவறை, தரைபகுதி Closet ஆகியவற்றில் பராமரிப்பு பணிகள் மற்றும் தண்ணீர் வசதி செய்தல் ஆகிய பணிகளை ரூ.1,50,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.404 நாள் 28.02.2023-ன் மூலம் ஒப்புதல்

வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, 20.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சுரேஷ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.46% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.264/2023/இ1

**தீர்மானம் எண்.**447 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.2

இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள பொது (ம) சமுதாய கழிவறைகளில் மாற்று திறனாளிகளுக்கு கைப்பிடி அமைத்தல் (ம) திட்டப்பணி தொடர்பான விவரப்பலகை அமைத்தல் ஆகிய பணியினை ரூ.50,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண். 430 நாள் 30.03.2023-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, 20.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சுரேஷ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.11% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.306/2023/இ1

**தீர்மானம் எண்.**448 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.3

குளச்சல் நகராட்சி காமராஜர் பேருந்து நிலைய பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் போது கிடைக்கப்பெற்ற Steel shutters கதவுகள் மற்றும் ஜன்னல்கள்

போன்ற பொருட்களை பொது ஏலம் மூலம் அப்புறப்படுத்துவதற்கு ரூ.1,16,925/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதிப்பெற்று, 27.04.2023 அன்று பொது ஏலம் கோரப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு பணியின் அவசர அவசியம் கருதி, மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4986/2022/இ1

**தீர்மானம் எண்**.449 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.4

இந்நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ் காலனி சர்வே எண்.C2-4/8B-ல் ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டுதல் பணியினை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, 06.04.2023 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | Vargeesh construction Keezha Asaripallam | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2. | M/s.Seventh cartel firm, Tirunelveli | மதிப்பீட்டை விட 1.67% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Vargeesh construction, Keezha Asaripallam நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.317-1/2023/இ1

**தீர்மானம் எண்**.450 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, பதிவு செய்யப்பட்டது

## பொருள் எண்.5

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கட்டிடங்கள் இடித்து அப்புறப்படுத்தப்பட்டு, புதிய பேருந்து நிலைய கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும் வரை, அதற்கு மாற்றாக புனித மேரி மேல்நிலைப்பள்ளி அருகில் தற்காலிக பேருந்து நிலைய பயணிகள் நிழற்கூடம் மற்றும் நேர காப்பாளர் அறை அமைத்தல் பணியினை ரூ.5,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, 29.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜார்ஜ் ஸ்டீபன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 5.00% அதிகம் |

| | | |
|---|---|---|
| 2. | திரு.B.செல்வின் குமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.B.செல்வின் குமார் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.498-1/2022/இ1

**தீர்மானம் எண்**.451 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.6

இந்நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் : 2022-23-ன் கீழ், ரூ.18.80 இலட்சம் மதிப்பீட்டில் 4 எண்ணம் (4.70 x 4) சூரிய ஒளியில் இயங்கும் சிறிய கோபுர விளக்குகள் அமைத்தல் பணிக்கு, 28.03.2023 அன்று மிண்ணணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருறுமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி பதிவேற்றம் செய்துள்ள நிறுவனம் / மதிப்பீட்டு விகிதம் | |
|---|---|---|---|---|
| | | | M/s.SPS Enterprises Chennai | M/s.Keyes Contractors Karaikudy |
| 1. | Providing Solar Mini Highmast light at Parnitivilai road Entrance near VKP school Opposite in Colachel Municipality. | 4.70 | மதிப்பீட்டை விட 0.10% குறைவு | மதிப்பீட்டை விட 0.10% அதிகம் |
| 2. | Providing Solar Mini Highmast light at Kalimar junction near Compost yard Entrance in Colachel Municipality. | 4.70 | மதிப்பீட்டை விட 0.10% குறைவு | மதிப்பீட்டை விட 0.10% அதிகம் |
| 3. | Providing Solar Mini Highmast light at Palathankarai Road junction in Colachel Municipality. | 4.70 | மதிப்பீட்டை விட 0.10% குறைவு | மதிப்பீட்டை விட 0.10% அதிகம் |
| 4. | Providing Solar Mini Highmast light at Chettiayatheru junction in Colachel Municipality. | 4.70 | மதிப்பீட்டை விட 0.10% குறைவு | மதிப்பீட்டை விட 0.10% அதிகம் |

மேற்காணும் 4 பணிகளுக்கும் M/s.SPS Enterprises, Chennai நிறுவனம் மதிப்பீட்டை விட 0.10% குறைவாக ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளது. எனவே மேற்படி நிறுவனம் அளித்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று, பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.**1845-2/2022/இ1

**தீர்மானம் எண்.**452 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, பதிவு செய்யப்பட்டது

## பொருள் எண்.7

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 22 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின் மோட்டார்கள் மூலம் குடிநீர் 10 எண்ணம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு இரண்டு நாட்களுக்கு ஒரு நாள் என்ற வீதம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 33% குளோரின் அளவு கொண்ட Bleaching powder 1000 லிட்டருக்கு 4 கிராம் வீதம் 10 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளிலும் 8,880 grams கலக்கப்பட்டு சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது 2023-24 ஆம் ஆண்டிற்கு Bleaching powder வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.250000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்.**411/2023/இ2

**தீர்மானம் எண்.**453 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 22 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின் மோட்டார்கள் மூலம் குடிநீர் 10 எண்ணம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு இரண்டு நாட்களுக்கு ஒரு நாள் என்ற வீதம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு வினியோகம் செய்யப்படும் குடிநீரின் தரத்தை மாதம் ஒரு முறை சோதனை செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளது.

எனவே வினியோகம் செய்யப்படும் குடிநீரின் தரத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாகர்கோவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாகர்கோவில் உள்ள சோதனை கூடத்தின் மூலம் ஆய்வு மேற்கொள்வதற்கு 2023-24 ஆம் ஆண்டிற்கு உத்தேச செலவு தொகை ரூ.1,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.**411/2023/இ2

**தீர்மானம் எண்.**454 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தை இடித்து மறு சீரமைக்கும் பணி நடைபெறுவதால், கட்டுமான பணிக்கு இடையூறாக உள்ள மின் கம்பங்களை மாற்றுவதற்கும், மேலும் பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளின் மின் இணைப்பினை தற்காலிகமாக துண்டிப்பு செய்வதற்கும், புதியதாக மெயின் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள Temporary Bus stand shed -க்கு மின் இணைப்பு பெறுவதற்கும் மற்றும் இதர செலவுகளுக்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ2/387/2023

**தீர்மானம் எண்**.455 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.10

குளச்சல் நகராட்சியில் 2023-2024 ஆம் ஆண்டிற்கு

1. புதிய குடிநீர் குழாய் இணைப்பு
2. பழுது பார்ப்பு கட்டணம்
3. துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு கட்டணம்
4. பெயர் மாற்றத்திற்கான கட்டணம் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. புதிய குடிநீர் குழாய் இணைப்பு

(A) குடியிருப்பு பயன்பாடு

| அளவு | சிமெண்ட் தளம் | தார் தளம் | மண் தளம் |
|---|---|---|---|
| 0-15m | 19137 | 18769 | 11137 |
| 0-30m | 31111 | 30377 | 15012 |
| 0-45m | 44008 | 42907 | 19858 |
| 0-75m | 68143 | 65237 | 27895 |
| 0-90m | 80392 | 78188 | 32092 |

B) வணிக பயன்பாடு

| அளவு | சிமெண்ட் தளம் | தார் தளம் | மண் தளம் |
|---|---|---|---|
| 0-15m | 29137 | 28769 | 21137 |
| 0-30m | 41111 | 40377 | 25012 |
| 0-45m | 54008 | 52907 | 29858 |
| 0-75m | 78143 | 75237 | 37895 |
| 0-90m | 90392 | 88188 | 42092 |

C) தொழிற்சாலை பயன்பாடு

| அளவு | சிமெண்ட் தளம் | தார் தளம் | மண் தளம் |
|---|---|---|---|
| 0-15m | 24137 | 23769 | 16137 |
| 0-30m | 36111 | 35377 | 20012 |
| 0-45m | 49008 | 47907 | 24858 |
| 0-75m | 73143 | 70237 | 32895 |

| | | | |
|---|---|---|---|
| 0-90m | 85392 | 83188 | 37092 |

2) பழுதுபார்ப்பு கட்டணம்

| அளவு | தளம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | மண் தளம் | 1100/- |
| 2 | தார் தளம் | 1650/- |
| 3 | சிமெண்ட் தளம் | 1700/- |

3) துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு கட்டணம்

| | |
|---|---|
| துண்டிப்பு கட்டணம் | ரூ.800/- |
| மறு இணைப்பு கட்டணம் | ரூ.800/- |

4) பெயர் மாற்றத்திற்கான கட்டணம்

பெயர் மாற்றத்திற்கான கட்டணம் ரூ.450/-

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.256/2020/இ2

**தீர்மானம் எண்**.456 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.11

இந்நகராட்சி அலுவலக பொதுப்பிரிவில் 3KVA UPS பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட UPS தானாகவே Off ஆகிவிடுகிறது. அதனால் அலுவலக பணி மேற்கொள்வதில் காலதாமதமாகிறது. மேலும் உயர் அதிகாரிகளால் நடத்தப்படும் ஆய்வு கூட்டம் தற்போது Video conference மூலம் நடத்துவததால் attend பண்ண இயலாமல் உள்ளது. எனவே UPS சர்வீஸ் செய்யும் நிறுவனமான Numeric Noveteur மூலம் service செய்து report -ல் DC capacitor மற்றும் Transformer failure ஆகிவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் UPS வாங்கி 10 வருடங்களுக்கு மேலாகி விட்டது. எனவே புதியதாக 3KVA UPS வாங்குவதற்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.36,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ1/400/2023

**தீர்மானம் எண்**.457 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.12

இந்நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவில் 5KVA UPS பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது மேற்கண்ட UPS தானாகவே Off ஆகிவிடுகிறது. மேலும் மின் தடங்கள் ஏற்படும் போது Battery backup இல்லாமல் அனைத்து Computer களும் தானாகவே Off ஆகிவிடுகிறது. எனவே அலுவலக பணிகள் செய்வதில் தடங்கல் ஏற்படுகிறது. எனவே UPS சர்வீஸ் செய்யும் நிறுவனமான Numeric Noveteur மூலம் service செய்து report பெறப்பட்டதில் 14 எண்ணம் பேட்டரிகளும் failure ஆகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எனவே 14 எண்ணம் பேட்டரிகள் புதியதாக வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,26,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்**.458 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

ந.க.எண்.இ1/401/2023

## பொருள் எண்.13

இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய கட்டிடங்களை இடித்து அகற்றி விட்டு புதிய பேருந்து நிலைய கட்டிட பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.500.00 இலட்சத்திற்கு 06.03.2023-ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மாற்று இடத்தில் பேருந்துகளை நிறுத்துவது குறித்து இடம் தேர்வு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. தற்போது Temporary shed அருகில் தற்காலிகமாக பொது மக்கள் மற்றும் ஓட்டுநர், நடத்துநர் பயன்படுத்துவதற்கு 2 எண்ணம் Mobile Toilet (Indian type) வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்ளவும், அதற்கான Lighting arrangement, Plumping arrangement & septic tank arrangement ஆகிய பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.1,50,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் செலவு செய்வதற்கும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.498/2022/இ1

**தீர்மானம் எண்**.459 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் காமராஜர் சாலையில் குடிநீருடன் கழிவு நீர் கலந்து வருவதால் வண்ணாத்திவிளை பகுதி மற்றும் காமராஜர் சாலை பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பாதிப்பு அடைந்து வருகிறார்கள். வடிகால் ஓடைக்கு அடியில் குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளதால் எந்த இடத்தில குடிநீர் குழாயில் உடைவு ஏற்பட்டுள்ளது என்பது கண்டறிய இயலவில்லை. எனவே பொது மக்களின் நலன் கருதியும் குடிநீரின் பாதுகாப்பு கருதியும் மேற்படி சாலையில் 90mm PVC pipe line புதியதாக அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.2,30,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்**.460 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.15

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3-ல் தெற்கு கள்ளியடைப்பு சாலையில் காருண்யா பள்ளிக்கூடம் அருகில் கதவு எண்.1-161, 1-168 ஆகிய வீடுகளுக்கு முன்புறமாக செல்லும் வடிகால் ஓடை குறுகலாக உள்ளதாலும் அதன் அருகில் அமைக்கப்பட்டுள்ள சிறுபாலம் முழுவதும் மண் நிரம்பி மழைநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்குவதாலும் மழைகாலங்களில் மழைநீர் வடிகால் ஓடை வழியாக செல்லாமல் வீடுகளுக்குள் புகுந்து விடுகிறது. மேற்படி தெருவில் இருக்கும் வீடுகள் பள்ளத்தில் இருப்பதால் உடமைகள் சேதமடைந்துவிடுகிறது. எனவே வடிகால் ஓடையின் அகலத்தை அதிகப்படுத்தவும் சிறுபாலத்தில் தேங்கியுள்ள மண்ணை மாற்றவும் மதிப்பீடு ரூ.1,00,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்**.461 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.16

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17-ல் பள்ளிரோட்டில் வடிகால் ஓடையின் மூடு சிலாப் சேதமடைந்தும் வடிகால் ஓடை முழுவதும் மண் மற்றும் கழிவுகள் நிரம்பி கழிவுநீர் ஓடி செல்லாமல் தேங்கி சுகாதார சீர்கேடை விளைவிக்கும் வகையில் துர்நாற்றம் வீசி கொண்டிருக்கிறது. எனவே தேவைப்படும் இடங்களில் மூடுசிலாப்பை உடைத்து வடிகால் ஓடையை சுத்தம் செய்வதற்கும் உடைந்த பக்கசுவர் மற்றும் மூடுசிலாப்பை சரிசெய்வதற்கும் மதிப்பீடு ரூ.2,00,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்**.462 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.17

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13-ல் பொட்டல் சாலையில் திங்கள் நகர் செல்லும் மெயின் ரோட்டின் Entrance பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வடிகால் ஓடையின் பக்கசுவர் மற்றும் தரை உடைந்து கழிவுநீர் வீட்டின் மதில் சுவர் வழியாக கட்டிடத்திற்குள் சென்று விடுகிறது. அதனால் வீட்டின் Compound wall இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி இடத்தில் புதியதாக வடிகால் ஓடை அமைக்கவும், மேலும் வி.கே.பி பள்ளிக்கூடம் எதிர்புறம் வடிகால் ஓடையில் முழுவதும் மண் நிரம்பி உள்ளதால் கழிவுநீர் தேங்கி சாலையில் செல்கிறது. இதனால் போக்குவரத்திற்கும், பாதசாரிகள் நடந்து செல்வதற்கும் இடையூறாக உள்ளது. மேற்படி வடிகால் ஓடையின் மேல் மூடுசிலாப் அமைக்கப்பட்டு நடைபாதையாக உள்ளது. எனவே ஆங்காங்கே மூடுசிலாப்பை உடைத்து

வடிகால் ஓடையில் நிரம்பிய மண்ணை மாற்றவும் உடைந்துள்ள மூடுசிலாப்பை புதியதாக அமைக்கவும் மதிப்பீடு ரூ.1,20,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்**.463 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.18

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் AMRUT 2.0 திட்டத்தின் கீழ் பவுண்டரி ரோடு லேஅவுட் -1 ல் Sy.No.A1-29/2-ல் சிறுவர் பூங்கா அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.26467/2021/AMRUT-1 நாள் 30.01.2023-ன் படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி திட்டத்தில் பூங்கா அமைக்கும் மதிப்பீட்டில் பக்க சுவர் அமைப்பதற்கு வழிவகை மேற்கொள்ளவில்லை. Road Side, Retaining wall அமைத்தால் தான் அதன் மேல் பூங்காவிற்கு மதில் சுவர் கட்ட முடியும். எனவே பக்கசுவர் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.3,00,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்**.464 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.19

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8-ல் கனியாகுடி தெருவில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருவதால் பல இடங்கனில் தோண்டி பார்க்கப்பட்டது. வடிகால் ஓடையின் அடியில் குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளதால் எந்த இடத்தில் குடிநீர் குழாய் உடைவு ஏற்பட்டு கழிவு நீர் கலக்கிறது என்பது கண்டுபிடிக்க இயலவில்லை. எனவே குடிநீரின் பாதுகாப்பு கருதியும், குடிநீரின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும் கனியாகுடி பகுதியில் புதியதாக 90mm PVC pipe line அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.4,80,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்**.465 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.20

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11,16,17-ல் பள்ளி ரோட்டில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருவதால் மேற்படி சாலையில் பல இடங்களில் தோண்டி பார்க்கப்பட்டது.

வடிகால் ஓடைக்கு அடியில் குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளதால் எந்த இடத்தில் குடிநீர் குழாய் உடைந்துள்ளது என்பது கண்டறிய இயலவில்லை. குடிநீரின் பாதுகாப்பு கருதியும் பொது மக்கள் நலன் கருதியும், பள்ளி ரோட்டில் கட்டண கழிவறை அருகிலிருந்து பாலையா மார்பிள் கடை வரை 90mm PVC pipe line அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.1,40,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்**.466 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.21

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணம் கழிப்பிடத்தை திரு.ரெஜினி குமார் என்பவர் 01.04.2022 முதல் குத்தகைக்கு எடுத்திருந்தார். தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.11112/2022/TP3 நாள் 14.12.2022-ன் படி, இந்நகராட்சிக்கு ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதியும் ந.க.எண்.1652/2023/மா.தி1 நாள் 18.02.2023-ன் படி, பழைய பேருந்து நிலையத்தை இடித்து அப்புறப்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டது.

எனவே பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தின் உரிமத்தை 01.04.2023 முதல் கேட்பினை கணணியில் நீக்கம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**.307/2023/**அ**2

**தீர்மானம் எண்**.467 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.22

இந்நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பகுதியில் 2022-23 ஆம் ஆண்டு ஈடுபடுத்தப்பட்ட ஜெயம் மகளிர் சுய உதவிக்குழுவின் பணிகாலம் 31.03.2023 உடன் முடிவடிந்துள்ளது. தற்போது மழை தொடர்ந்து பெய்து வருவதினால் DBC பணிகள் மேற்கொள்வது அவசியமாகிறது. மேலும் மேற்கண்ட மகளிர் குழுவானது கடந்தாண்டு வழங்கப்பட்ட தினசரி ஊதிய அளவில் பணிபுரியும் 2023-24 ஆம் ஆண்டு பணிக்காலத்தினை புதுப்பிக்க கோரியுள்ளதினை ஏற்று அவசர அவசியம் கருதி இக்குழுவிற்கு 2023-24 ஆம் ஆண்டிற்கு பணிக்காலம் நீட்டித்து வழங்க அனுமதி வேண்டப்படுகிறது. இக்குழுவில் 20 DBC பணியாளர்கள் பணிக்கு அமர்த்துவதற்கு 2023-24 ஆம் ஆண்டிற்கு தினக்கூலி தொகை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1894/21/அ2 நாள் 12.12.2022-ன் படி, கீழ்க்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. DBC பணியாளர்கள் எண்ணிக்கை - 20
2. தினசரி ஊதியம் ஒரு நாளைக்கு ரூ. 300/-
3. ஆம் ஆண்டிற்கு 20 x 365 x 300 = ரூ.21,90,000/-

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்**.1182/2017/**எச்**1

**தீர்மானம் எண்**.468 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.23

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண் .17-ஐ (வரிவிதிப்பு எண்.148/BD01/00024) திரு.ராஜன் என்பவர் மாத வாடகை ரூ.2300/-க்கு எடுத்திருந்தார். மேற்படி நபர் தன்னால் கடையை நடத்த இயலாத காரணத்தினால் 11.03.2022 தேதியில் கடையினை நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார். கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.50,000/- கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.27600/- மொத்தம் சேர்த்து ரூ.77600/- நகராட்சியில் செலுத்தியுள்ளார். கடைக்கு மாத வாடகை மே 2021 முதல் மார்ச் 2022 வரைக்கும் ரூ.29,854/- நிலுவையாக உள்ளதன் அடிப்படையில் கடைக்கான முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி நபருக்கு முன்வைப்புத் தொகை ரூ.77600/-லிருந்து மாத வாடகை நிலுவைத் தொகை ரூ.29,854/-ஐ ஈடு செய்தமைக்கும் மீதமுள்ள தொகை ரூ.47,746/-ஐ அன்னாருக்கு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்படி தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்**.469 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.24

நகராட்சி நிர்வாக இயக்குநர் (ம) திட்ட இயக்குநர் ந.க.எண்.3088/2022/துஇத1 நாள் 23.02.2023-ன் படி, நகர்ப்புற உள்ளாட்சிகளில் உருவாகும் மக்கும் குப்பைகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்தை 'செழிப்பு' என்ற விற்பனை பெயர் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி, நகராட்சியில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரத்தை விற்பனை செய்ய உரிமம் பெறுவதற்கான ரூ.2,250/- செலுத்தப்பட்டது. மேற்படி இணை இயக்குநர் மேலாண்மை துறை அலுவலகம் அவர்கள் தொலைபேசி மூலம் உரிமம் பெறுவதற்கான ரூ.3,850/- செலுத்த இணை இயக்குநர் மேலாண்மை துறை தெரிவிக்கப்பட்டது. பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.331/2023/எச்1

**தீர்மானம் எண்**.470 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது

.

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி